# தொ.மு.சி. ரகுநாதன்

செ. திவான்

# தொ.மு.சி. ரகுநாதன்

செ.திவான் M.A.,M.Phil.,

நூலாசிரியரின் 123 வது நூல்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தொ.மு.சி. ரகுநாதன் |
| பொருள் | : | இலக்கியம் |
| ஆசிரியர் | : | செ.திவான் |
| பதிப்பு ஆண்டு | : | 2020, ஜூன் |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | : | 48 |
| அச்சிட்டோர் | : | குமரேசன், சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி. செல்: 9443379005 |
| வடிவமைப்பு | : | அப்துல் நசீர், நெல்லை. செல்: 9489115236 |


## சமர்ப்பணம்

எனது இனிய நண்பரும், வழக்கறிஞரும்
தொ.மு.சி. ரகுநாதனின் மூத்த புதல்வருமான
**ஹரீந்திரனுக்கு...**

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்

– செ. திவான்

**ரெகான் சுலைமான் பதிப்பகம்**
**106F, 4A, திருவனந்தபுரம் சாலை,**
**பாளையங்கோட்டை, திருநெல்வேலி- 627002**
**போன்: 0462-2572665**

# தொ.மு.சி. ரகுநாதன் - பீடிகை

திருநெல்வேலிச் சீமை, தீந்தமிழ் இலக்கியத்தில் தனி இடம் பெற்ற சீமை; நெல்லைச் சீமையின் இலக்கிய ஆளுமைகள் பட்டியல் ஏராளம்; ஏராளம்.

## சிதம்பரத் தொண்டைமான்

**‘அரங்கத்து அரவணையான்’** மீது கவிபாடியவர் சிதம்பரத் தொண்டைமான். அவர் பாடிய **‘ஸ்ரீரங்கநாதன் அம்மானைப் பாடல்கள்’** முப்பது அச்சில் வந்துள்ளது. அவரே **‘நெல்லைப்பள்ளு’**வும் பாடியுள்ளார்.

## அருணாசலத் தொண்டைமான்

சிதம்பரத் தொண்டைமானின் சித்தப்பா அருணாசலத் தொண்டைமான், **இலட்சத்திற்கு மேல் கவிபாடிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் சீடர். குருவைப் போல தாமும் ‘செந்திலம்பதி இரட்டை’ செந்தில் வண்ணப்பதிகம்** எனும் நூல்களை கவியாகத் தந்துள்ளர்.

## தொண்டைமான் முத்தையன்

சிதம்பரத் தொண்டைமானின் புத்திரர் தொண்டைமான் முத்தையா (1879-1936) ஆத்ம விசாரணையிலே வாழ்நாளைக்கழித்தவர். ஆங்கிலத்தில் மந்திரமேய்ப்பன் என்ற கவிதையையும் பாடியுள்ளார். வங்கத்து தாகூரின் ‘ட்ரம்பட்’ கவிதையை **‘எக்காளம்’** என்று மொழி பெயர்த்தார். (தொண்டைமான் முத்தையா நினைவுமலர் பதிப்பாசிரியர் தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் 1937 பக்கம் 12 – 13, பக்கம் XXV)

## பிரமமுத்தன்

தொண்டைமான் முத்தையாவின் இயற்பெயர் பிரமமுத்து. அவர் 1922 இல் முப்பத்து மூன்று தியானச் சிந்தனைகள், மூன்று தனிப்பாசுரங்கள் என்ற நூலை எட்டு அணா விலையில் வெளியிட்டார். இதோ இந்த முகப்புப்பக்கம்; முப்பத்து மூன்று தியானச் சிந்தனைகள், மூன்று தனிப்பாசுரங்கள் பற்றிய விவரம்...

**AUM:**

# THIRTY THREE DEVOTIONAL THOUGHTS, AND. THREE SONNETS.

By

**BIRAMA MUTHAN.**

(TONDAIMAN S. B. MUTHAYYA, TINNEVELLY,)
*Senior Art Instructor, Hindu College.*

ஓம்.

முப்பத்து மூன்று

# தியானச் சிந்தனைகள்,

மூன்று தனிப்பாசுரங்கள்.

பிரம முத்தன்.

(தொண்டைமான், முத்தையா, இந்துகாலேஜ், திருநெல்வேலி.)

எழுதியது.

மேற்படியார் குமாரன்;

தொ. மு. பாஸ்கரனால்

பதிப்பிக்கப்பெற்றது.

1922.

UNION CENTRAL PRESS. TINNEVELLY.

*All Rights Reserved.*] [*Price 8 As.*

### முப்பத்து மூன்று தியானச் சிந்தனைகள்

*1. உண்மைப்பொருள், 2. கடவுளை அறிதல், 3. பலபொருள் ஒருகாஷி, 4. துன்பம் துன்பமன்று, 5. அன்பின் மயம், 6. பூரணசுகம், 7.மனத்திருப்தி, 8. நகை வியாபாரி, 9. சஞ் சலநிவிர்த்தி, 10. சாந்த சோபிதம், 11. சித்திரக்காட்சி, 12. மரண பயம், 13. துன்ப வார்த்தை, 14. தன்மறுப்பு, 15. மனவாதம், 16. கனா அரசு, 17.உண்மைச் சன்னியாசம், 18. முயற்சியின் லாபம், 19. தன்னந்தனியன், 20. நிலைத்தபேறு, 21. சத்சித் ஆனந்தம், 22. நாடக அரங்கம், 23. தன் முயற்சி, 24. கண்ணீரின் பெருமை, 25. சாதுக்களின் வாதம், 26. ஆண்டான் அடிமை, 27. ஞானசரவாதம், 28. பொன்தட்டு போசனம், 29. தாயின் கருணை, 30. வாசா ஞானம், 31. வெட்ட வெளிப்பெண், 32. பக்தியின் பரவசம். 33. பாவனைப் பயன்.*

### மூன்று தனிப்பாசுரங்கள்

*கடவுள், உலகம், மனிதன்.*

**இயலானந்தம், உண்மை முந்நிற உட்கிடை ‘சமரச ஞான அனுபவம்’** *என்ற கட்டுரைகளையும் எழுதியவர் தொண்டைமான் முத்தையன்.*

### எம்மதமும் சம்மதம்

**‘எம்மதமும் சம்மதமென பேரிகை ஆர்மீன்’** *என்று* **சமரச ஞான அனுபவத்தில்** *கூறியுள்ளார்.*

### யோகசாதனம்

*அந்த நூலின் அட்டையில் யோக சாதனம் என்ற நூல் பிரம முத்தனால் (தொண்டைமான் முத்தையா) எழுதப்பட்டு விரைவில் வெளிவரும் என்ற அறிவிப்பும், தியானச் சிந்தனைகள் நூல் கிடைக்கும் இடங்கள் பற்றிய அறிவிப்பும் வெளியாகியுள்ளது.*

*இதோ அந்தப் பக்கம்*

# யோக சாதனம்.

தியானச்சிந்தனைகளை எழுதிய, பிரம முத்தனால் "யோ
சாதனம்" என்ற ஓர் நூல் கூடிய சீக்கிரம் வெளிவரும். இயா
சிந்தனைகளின் குப்தமான முடிவுகளைத், தம் சுய அநுபவத்
கண்டு தெளிய விரும்பும் ஒவ்வொருவரும் வாசித்து உண
கூடிய ரகசியங்கள் அடங்கியது. ஆண், பெண், இருதிற
னரும், எப்பருவத்தும் இலகுவில் அப்பியசிக்கத்தகுந்த மு
களை உட்கொண்டது. ஆன்ம சக்தியை விருத்திசெய்து, ப
பொருளோடு ஒன்றி, உலகில் சாந்தமுற வாழ விரும்பும் மு
சுக்களுக்கு இன்றியமையாத சாதனமாகும். வேண்டுவோர்,
க்கு எழுதிக்கொள்ள வேண்டுகிறேன்.

குற்றாலரோட்டு, திருநெல்வேலி. — தொ. மு. பாஸ்கரன், S/o தொண்டைமான் முத்தையன்

## இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்.

1. தொ. மு. பாஸ்கரன், குற்றாலரோட்டு, திருநெல்வேலி.
2. மானேஜர், யூனியன் சென்ற்ரல் பிரஸ், வடக்குரதவீதி, திருநெல்வேலி.
3. S. R சுப்பிரமணியபிள்ளையவர்கள், புக்செல்லர், திருநெல்வேலிப் பாலம்.
4. S. நரசிம்மபிள்ளையவர்கள், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

## முஸ்லிம் கலெக்டர்

திருநெல்வேலி டவுன் குற்றால ரோடு தொ.மு.சி. ரகுநாதன் வீட்டருகே முஸ்லிம் டிப்டி கலெக்டர் இருந்தார். முஸ்லிம் கலெக்டர் சாய்பு என்றே அவரைக் குறிப்பிடுவார்கள். இது தொ.மு.சி.ரகுநாதனின் தாத்தாவிற்கும் தந்தைக்கும் ஆசை. தனது மூத்தமகனை கலெக்டராக ஆக்கவேண்டுமென்று அதுபோலவே நடந்தது.

## தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் IAS (22.7.1904 - 31.3.1965)

தொ.மு.சி. ரகுநாதனின் அண்ணன் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்.தொண்டைமான் மரபினரின் முதல் பட்டதாரி. வருவாய்த்துறை ஆட்சியாளர், இந்திய ஆட்சிப் பணியில் தகுதி பெற்ற மாவட்டக் கலெக்டராகப் பணியாற்றியவர்.

## பாஸ்கரத் தொண்டைமானின் நூல்கள்

பாஸ்கரத் தொண்டைமான் எழுதியுள்ள நூல்கள் விபரம் இதோ

## 1939 ஆனந்த விகடன் தீபாவளி மலர்

*1939* ஆனந்த விகடன் தீபாவளி மலரில் பக்கம் *56 - 61* வரை. கிருஷ்ணாபுரம் சிற்பங்கள் பற்றி **'கிருஷ்ணாபுரம்'** என்ற கட்டுரையை எழுதினார் பாஸ்கர தொண்டைமான்.

## தமிழ் அறிஞர் முதலியார்

வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார் பற்றி, **'முதலியார் அவர்களும் அவர்களுடைய நூல்களும்'**, என்ற நூலை *1941* இல் *144* பக்கங்களில் வெளியிட்டார் பாஸ்கரத் தொண்டைமான்.

## டி.கே.சி.யின் வாழ்க்கை வரலாறு

ரசிகமணி டி.கே.சி.யின் 'வட்டத் தொட்டி'யுடன் நல்ல தொடர்பு கொண்டவர் பாஸ்கரத் தொண்டைமான் சிறந்த எழுத்தாளர். *1945* டிசம்பரில் டி.கே.சி.யின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். ஸ்டார் பிரசுரம் வெளியிட்ட *2* ரூ விலையுள்ள இந்த நூல் *160* பக்கங்களைக் கொண்டது.

சிறந்த தமிழறிஞர் தனது தந்தையாரான பிர்ம முத்தனின் தியானச் சிந்தனைகள் ( Devotional Thoughts) நூலினை *1959* இல் மறுபதிப்புச் செய்து வெளியிட்ட பெருமை இவருக்கு உண்டு.

### பிள்ளைவாள்

தம்முடைய நண்பர் 'கானுகோ சங்கரலிங்கம் பிள்ளைவாள்' என்ற நூல் எழுதியுள்ளார் பாஸ்கரத் தொண்டைமான்.

### வேங்கடம் முதல் குமரி வரை

வேங்கடம் முதல் குமரி வரை ஐந்துபாகங்கள். 'பாலாற்றின் மருங்கிலே' ஏப்ரல் 1960 (253 பக்கங்கள்), 'பொன்னியின் மடியிலே', 'காவிரிக்கரையிலே' செப்டம்பர் 1961 (338 பக்கங்கள்), 'பொருநைத்துறையிலே' ஆகஸ்ட் 1962 (258 பக்கங்கள்), 'அமரகாதலர்', மார்ச் 1961 (151 பக்கங்கள்), 'கல்லும் சொல்லாதோ கவி' மார்ச் 1960 (136 பக்கங்கள்), 'கலைஞன் கண்ட கடவுள்', 1961 (103 பக்கங்கள்), தமிழ்க் கோயில்கள், தமிழர் பண்பாடு, வேங்கடத்துக்கு அப்பால் 1984 (454 பக்கங்கள்), மூவர் கண்ட முருகன் 1959 (40 பக்கங்கள்), கம்பன் சுயசரிதம், தென்றல் தந்த கவிதை, பிள்ளையார் பட்டிப் பிள்ளையார் 1956 (37 பக்கங்கள்) மதுரை மீனாட்சி, ஆறுமுகமான பொருள், இந்திய கலைச்செல்வம், பட்டிமண்டபப் பேருரைகள், இப்படிப் பல நூல்கள் தந்தவர் தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான். அவரது நினைவு அறக்கட்டளையிலிருந்து 'கலைமணி, பாஸ்கரத் தொண்டைமான் கலைக்களஞ்சியம்' எனும் நூல் சென்னையிலிருந்து செப்டம்பர் 2005 இல் 312 பக்கங்களில் வந்துள்ளது.

தமிழ்நாட்டிலே பாஸ்கரத் தொண்டைமான் போகாத தலமில்லை. தரிசிக்காத கோயில் இல்லை.

### ராஜேஸ்வரி நடராஜன்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமானின் புதல்வி ராஜேஸ்வரி நடராஜன் 'எந்தையும், தாயும்', எனும் 50 பக்கங்களைக் கொண்ட நூலை 1964 சூலையில் வெளியிட்டுள்ளார்.

### தொ.மு.சிதம்பர ரகுநாதன்

சிதம்பரத் தொண்டைமான், அருணாசலத் தொண்டைமான், தொண்டைமான் முத்தையன் (பிரமமுத்தன்) தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் இந்த வாழையடி வாழையாக எழுத்தாளர்கள் வரிசையிலே தொண்டைமான் முத்தையா – முத்தம்மாள் புதல்வராக 20.10.1923 இல் நெல்லையில் பிறந்தவர் சிதம்பர ரகுநாதன்.

### மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக்கல்லூரி

திருநெல்வேலி சந்திப்பில் அப்போது இயங்கிவந்த மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக்கல்லூரியில் இண்டர் மீடியட் படித்தார். 1942 இல் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றதால் கல்லூரிப் படிப்பு தடைபட்டது.

### ஞானமுத்து

1940 லிருந்து இந்துக்கல்லூரி ஆண்டு மலரை முதல்வர் அலெக்சாந்தர் ஞானமுத்து மேற்பார்வையில் வெளியிட ஆரம்பித்தது. 1940 – 1941 ஆம் கல்வி ஆண்டிற்கான ஆண்டு மலர் 78 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

### எம்.ஏ.அப்பாஸ்

அதில் பேராசிரியர் V. பொன்னுசாமி பிள்ளை, அ.சீனிவாசராகவன், ஜே.எஸ்.தர்மக்கண், கு.அருணாசலக் கவுண்டர், ஆகியோரது கட்டுரைகளும், பழைய மாணவர் தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் எழுதிய கம்பன் ஒரு கனவு என்ற கட்டுரையும் பழைய மாணவன் கோபாலசமுத்திரம், சிவராமன், மாணவர்கள் பா.துரைராஜு, Z. பொன்னுசாமி, எம்.ஏ.அப்பாஸ், (உமறுங்கவித்திமிரும்) S. ஷண்முகவேல், வழக்கறிஞர் R. பாலகிருஷ்ணபிள்ளை, S. நல்ல முஹமது ஆகியோரது கட்டுரைகளும், நூல் மதிப்புரைகளும், கல்லூரி ஆண்டுக்குறிப்புகளும் உள்ளது.

### பேராசிரிர் அ.சீனிவாசராகவன் - வழக்கறிஞர் மகராஜன்

25.10.1940 இல் பேராசிரியர் அ.சீனிவாசராகவன் தலைமையில் தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் **'இலக்கிய மறுமலர்ச்சி'** என்ற தலைப்பில் உரை நிகழ்த்தியதும், வழக்கறிஞர் மகராஜன் தலைமையில் (பின்னாளில் நீதியரசர்) **'பாரதியும், வில்லியும்'** என்ற தலைப்பில் பேராசரியர் ஆ.முத்துசிவன் உரையாற்றிய செய்தியும் இன்னபிற செய்திகளும் உள்ளது. இத்தோடு நின்றுவிட இதனை எழுதவில்லை.

### ரகுநாதனின் முதற்படைப்பு

1940–1941 ஆம் ஆண்டின் ம.தி.தா. இந்துக்கல்லூரி ஆண்டு மலரில் **தொ.மு.சி.ரகுநாதன் 'வாய்' என்ற கட்டுரையை**

எழுதியுள்ளார். (பக்கம் 41, 42, 43.) அநேகமாக அவரது முதற் படைப்பு இதுவாக இருக்கக்கூடும். அது இதோ :

வாய்

BY

தோ. மு. சிதம்பரம் ( I Class )

தலைப்பைப் பார்த்தவுடனேயே, இதென்ன கொறுவாய் போவாய் வருவாய் செவ்வாய்—இந்த ரகத்தில் எந்த ரகமோ ? என்று நினைத்துவிடாதீர்கள். இந்த வாய் எந்த வாய் தெரியுமா ? உமிழ்வாய் அல்ல; தமிழ் வாய். சமஸ்கிருத பாஷையில் வாய்க்கும் பதமில்லையாமே. ஆதலின் அதை ஆதியில் பேசியவர்க்கும் வாய் இருந்திருக்க முடியாது; வாய் இருந்தால்தானே பேசலாம். ஆகவே சமஸ்கிருதம் ஒரு நாளும் பேசப்படவில்லை; ஒத்துக்கொள்கிறீர்களா ?

உலகமே வாயின் மயம். ஏன் ? வாயே உலகத்தில் மிகவும் சிறந்தது. வயிறுகூட இந்த வாய்க்கு அடிமைதான். வாய் ருசிபார்த்த பொருட்களைத் தானே வயிறு ஏற்கவேண்டும். தற்போது உலகிலே, பேரும் புகழும் பெற்று, ஆர வார வீர முழக்கங்கள் செய்துவரும் பிரசங்கிகள்கூட (அ. பி. களும் கூடத் தான் !) இந்த வாய்க்கு அடிமையே. எலும்பிலாத நா எந்த விதமுந் திரும்புமென்பார்களே — அந்த நாவு இந்த வாயினுள் அடக்கமென்றால் கேட்கவா வேண்டும் ! சரிதானே !

ஒருநாள் காலை நான் தமிழைப் படித்துக்கொண்டிருந்தேன். வாசலில் ஒரு பிச்சைக்காரன், "ஐயா நாலு நாளாய் இந்த வாய் ஒரு உருண்டை சோற்றைக் கூடக் கண்டதில்லையே, சாமி", என்று ஈனக்குரலில் கூவினான். எனக்கோ ஒரே கோபம்! பரீட்சைக்குப் படித்தது ஒன்றும் என் வாயிலே வரமாட்டேனென்கிறது. பிச்சைக்காரன் இப்படிச்சொன்னதும் எனக்கு அவன் என்னைக் கேலி பண்ணினான் எனத் தோன்றிற்று. என்னுடைய மனதில் அவன் கூறிய அந்த வார்த்தைகள், "சாமி, உங்கள் வாயிலே படிப்பு வரவில்லை. என்வாயிலே சோறு ஏறவில்லை" என்பது போன்று இருந்தன. உடனே எழுந்திருந்து பிச்சைக்காரனை அதட்டி, விரட்டிவிட்டேன். பிறகு நான் வெகுநேரம் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேன். கடைசியில் "அவனுடைய வாய் சோறு அறியவில்லை. என்னுடைய வாயோ படிப்பு அறியவில்லை. ஆகலால் இருவருடைய வாயும் ஒன்றையறியவில்லை. நமக்கும் அவனுக்கும் என்ன வேற்றுமை? ஒன்றுமில்லை" என்ற அரும்பெரும் உண்மையை நான் கண்டுபிடிக்கக் காரணமாயிருந்த பிச்சைக்காரனுக்கு வெகுமதி கொடாது விரட்டியதற்காக மிகவும் வருந்தினேன். (செந்தமிழும் நாப்பழக்கம் என்பார்களே.)

41

வாய்

"உலைவாயை மூடலாம். ஊர்வாயை மூட முடியுமா?" ஒருக்காலும் முடியாது. ஊரிலுள்ள ஆண்களின் வாயை மூடினாலும் மூடலாம். பெண்களின் வாயை மூடவே முடியாது. இந்தவுண்மையைச் சதிபதிகளின் சச்சரவு வாழ்க்கையில் நன்றாகக்காணலாம். கணவன், "ஏண்டி, வாய் ரொம்ப கிழிகிறதே", என்று கேட்டுவிட்டால் போதும், கணவன் சொன்னதை அப்படியே நிரூபித்து விடுவாள் மனைவி.

கூலியாட்கள் சிலசமயங்களில், "ஐயா, வாயிலே மண்ணையள்ளிப்போட்டுடாதிங்க" என்ற வார்த்தைகளிலே வாயின் பெருமை நன்கு விளங்குகின்றதல்லவா? ஆனால் கண்ணபிரான் தனது பால்யத்திலே வாயிலே மண்ணைப் போட்டாரே அவருக்கு என்ன செய்தது? என்று கேட்கவேண்டாம்! நாம் உலகிலே "வாயிலாப்பிராணிகள்" என்று கூறுகிறோமே, அந்த ஐம்பொறியுடைப் பிராணிகளை. ஏன் நம்மைவிட அவை தாழ்த்தப்பட்டிருக்கின்றன? பகுத்தறிவு இல்லை யென்பதற்காக அல்ல; நம்மைப்போல் அவை (கிளியைத்தவிர! அது கூண்டில் வளரும் மர்மம் தெரிகிறதா?) வாய்கிழியப்பேச முடியாததுபற்றித்தான். இப்படியே எல்லாவற்றிலும் வாயே முதலிடம் பெறுகிறது.

ஏதாவது உளறிக்கொண்டேயிருப்பவனை நாம் "உளறுவாயா" என்ற திருநாமஞ் சூட்டியழைக்கிறோமே. அவனை அப்படி யழைப்பதுதான் தகுமா? முறையா? அவனுக்கென கடவுள் கொடுத்த சக்தியை அவனனுபவிப்பதும் தவறா? சாப்பாடில் பலேகைக்காரனாயிருப்பவனைப் புலவர்கள்கூட (இகழ்ந்தோ புகழ்ந்தோ) பாடித்தான் விடுவார்கள். ஒரு கவி,

"புட்டவல் பட்டாணி பொரி தேங்குழலப்பம்
மட்டவிழுந் தோசை வடையுடனே - சட்டமுடன்
ஓயாமற் சோறுகறி யுண்டையுண்டை யாயடைக்கும்
வாயா நமச்சிவா யா"

என்று பாடினதென்ன பொய்யா? முற்றிலும் உண்மை. செல்வச் செருக்குள்ள நமச்சிவாயனின் வாய்த் திறமையை நையாண்டிப் புலவர் பாடினாரல்லவா? அந்த நமச்சிவாயன் நம்முடைய மிளகாய்ப் பொடி தோசையை-வடையுடன் 'புட்டவல்

வாய்

பட்டாணி-வெகுவாக ருசித்தவன் போலும்! இவை நம் புலவருக்குக் கிடைக் காததால் தான் அவர் வயிறெரிய இதைப் பாடினார் என்று தெரிகிறதல்லவா? ஐயோ பாவம்! அந்த நமச்சிவாயன் அவன் பேர்[—ந (ம்) ம சிவ் ஆய (ம் – கூட்டத்தா) ன் என்று இப்படிப் பிரித்து உரைகூறுவர் —(சி)] வாயா என்று முடிவதால் அல்லவா நம்ம கவிராயத் இப்படித் தம் வாய் நீளம் காட்டிவிட்டார்.

இப்படியே கூறிக்கொண்டு போனால் வாய்க்குத்தான் வலிக்காதா? வாய் தன் பெருமையை அப்படியே ஒரு பாட்டில் தந்துளது. அதை உங்கள் வாயில் கொஞ்சம் போட்டுப்பாருங்கள்.

"உலகம் இருப்பது யாராலே!
உருசிப்பதும் புசிப்பதும் யாராலே!

கலகம் விளைதலும் யாராலே! பின்
களித்துக் கூடலும் யாராலே!

புலவர் பாடலும் யாராலே!
புத்தகம் படிப்பதும் யாராலே!

தலைமை யாகவே வாய் நான்!
தனியர சிங்கு செலுத்துவனே!"

---

## பத்திரிகைத்துறையில் பணி - சாந்தி

1944 – 1945களில் தினமணியில் துணை ஆசிரியர், 1946 – 1947களில் 'முல்லை' ஆசிரியர், 1948 –1952 சக்தி இதழில் துணை ஆசிரியர் 1954 டிசம்பர் முதல் 1956 ஏப்ரல் வரை **'சாந்தி'** எனும் இதழை ஆசிரியராக இருந்து நடத்தியவர் தொ.மு.சி.ரகுநாதன்.

## சக்தி வை.கோவிந்தன்

தமிழின் முன்னோடிப் பதிப்பாளுமை, சக்தி வை.கோவிந்தன் 1939 ஆகஸ்ட் இல் சக்தி இதழைத் தொடங்கினார். **1954 ஏப்ரல் முடிய சக்தி மாத இதழ் வெளிவந்தது.** 1951 டிசம்பர் முதல் 1953 அக்டோபர் முடிய 'சக்தி' வெளிவரவில்லை. சக்தி 141 இதழ்கள் வெளிவந்தது. 1950 ஏப்ரல் முதல் 1951 செப்டம்பர் முடிய சக்தி இதழாக வராமல் மாதம் ஒரு புத்தகமாக வெளிவந்தது என்பார் பழ.அதியமான். (சக்தி வை.கோவிந்தன், காலச்சுவடு, நாகர்கோவில் 2008, பக்கம் 86), 1950 களில் தொ.மு.சி.ரகுநாதன் 'சக்தி' ஆசிரியர் குழுவில் பணிபுரிந்ததாகத் தெரிகிறது.

1954 ஏப்ரலுக்கு பிறகும் வெளிவந்தது சக்தி இதழ். 1954 மே – சூன் சக்தி இதழ் விலை அணா நான்கு, பக்கங்கள் 54. மலர் 18 இதழ் 7 ஆக வெளிவந்தது என்பது வரலாற்று உண்மை. அந்த முகப்புப் பக்கங்களைத் தந்துள்ளேன்.

பழ. அதியமான் தனது சக்தி வை. கோவிந்தன் நூலை மறுபதிப்புச் செய்யும்போது வரும் பதிப்புகளில் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.


சக்தி
1954

# பொருளடக்கம்

மே—ஜூன் 1954 மலர் 18 இதழ் 7

| | | | |
|---|---|---|---|
| வெள்ளம் வருகிறது | ... | தலையங்கம் | 1 |
| இந்திய நடனக் கலை | ... | ருக்மணி அருண்டேல் | 3 |
| குட்டிக் கதைகள் | ... | லெஸ்லிங் | 11 |
| ஆண் பெண் உறவு பற்றிய கல்வி அவசியமா? | ... | ஹால்டேன் | 13 |
| புகை குடிப்பதை நிறுத்த வேண்டுமா? | ... | ஆண்டர்சன் | 16 |
| புளியா, புலியா | ... | வை. கோ | 17 |
| அறுவடைக் கூலிகள் | ... | எலின் பெலின் | 19 |
| கவி காட்டுகிற உண்மைகள் | ... | ல. சண்முகசுந்தரம் | 26 |
| குழந்தை—ஒரு தொழிலாளி | ... | சி. ந. வைதீஸ்வரன் | 31 |
| உப்பு | ... | 'விஞ்ஞானி' | 35 |
| ஒரிசாவில் நெல் சாகுபடி | ... | எஸ். சுந்தரம் | 37 |
| ஆபத்தான ஆரஞ்சு | ... | 'டாக்டர்' | 39 |
| கணவனும் காதலனும் | ... | அப்துல் காதர் | 41 |
| புத்தக உலகம் | ... | வி. பாஸ்கரன் | 51 |

★

ஜய சக்தி வைகாசி

வருட சந்தா ரூ. மூன்று தனிப்பிரதி அணா நான்கு

### புத்தக உலகம்

சக்தி இதழின் சிறப்புமிக்க பகுதியான 'புத்தக உலகம்' பகுதியில் புதுப்புத்தகங்களின் சுருக்கமான மதிப்புரைகள் இடம் பெற்றன.

### நல்லுரை வெண்பா

1954 மார்ச் 'சக்தி' இதழில் பக்கம் 50 இல் நல்லுரை வெண்பா என்ற ரெ.முத்துக் கண்ணன் எழுதி நவயுகப் புத்தகாலயம் கல்லுக்கட்டி, காரைக்குடி ரூபாய் ஒன்று விலையில் வெளியிட்ட நூலுக்கு தொ.மு.சி. மதிப்புரை தந்துள்ளார்.

### தொ.மு.சி.யும் - மதிப்புரையும்

தொ.மு.சி. நல்லுரை வெண்பாவிற்குத் தந்த மதிப்புரை இதோ :

"இந்நூலில் ஆசிரியர் பல்வேறு நீதிகளைப் பற்றி 30 வெண்பாக்களில் எழுதியுள்ளார். சிறந்த கவிதாம்சமோ, புதிய அரிய கருத்துக்களோ காணப்படவில்லை. சர்வ சாதாரணமான செய்யுள் முயற்சி கவிதையும் கருத்தும் நிரம்பிய பல்வேறு நீதி நூற்கள் மலிந்துள்ள தமிழகத்தில் இந்த நல்லுரை வெண்பா, தேவையா என்பதே கேள்வி. 30 வெண்பாக்களும் 40 பக்கங்களும் கொண்ட **இந்த நூலுக்கு ஒரு ரூபாய் விலை வைத்திருப்பது அநியாயம்.** தமிழ் வாசகர்கள் அளகாபுரி மன்னர்கள் அல்ல என்பதைப் புத்தக வெளியீட்டாளர் கவனத்தில் இருத்தல் வேண்டும். புத்தகத்தின் அச்சும் அமைப்பும் மிக நன்றாயிருக்கின்றன. செந்திருவைப் போல சிங்காரித் தென்ன பயன்? என்று துணிவோடு எடுத்துரைக்கும் தைரியம் கொண்டவர் தொ.மு.சி.

### தொ.மு.சி. ரகுநாதன் கட்டுரைகள்

இளசைமணியன் தொகுப்பாசிரியராக இருந்து 'ரகுநாதன் கட்டுரைகள்' 238 பக்கங்களில் 2008 மார்ச்சில் வெளிவந்தது. 27 கட்டுரைகள். 2010இல் ரகுநாதனின் **இலக்கிய நேர்மை** 45 கட்டுரைகள் 337 பக்கங்கள், 2011 இல் '**மனச்சாட்சியின் குரல் பாரதி**' தொ.மு.சி. ரகுநாதன் கட்டுரைகள். தொகுப்பாசிரியர் இளசை மணியன்; 258 பக்கங்கள்.

ரகுநாதனின் **இலக்கிய விமர்சனம்** நூலில் ஏப்ரல் 1948, (130 பக்கங்கள்) சில கட்டுரைகள் உள்ளது.

ரகுநாதனின் **சமுதாய இலக்கியம்** நூலில் 1964, (244 பக்கங்கள்) சில கட்டுரைகள் உள்ளது. இவைகளைத் தவிர்த்து இன்னும் தொகுக்கப்பட வேண்டிய தொ.மு.சி. ரகுநாதனின் கட்டுரைகள் நிறைய உள்ளது.

## மகாகவி ஹோமர்

உதாரணத்திற்கு ஒரு சிலவற்றைப் பார்ப்போம். இளசை மணியனது ரகுநாதன் கட்டுரைகள் இலக்கிய நேர்மையில் பக்கம் 179 முதல் 210 வரை மகா கவிஹோமர் பற்றிய கட்டுரை வந்துள்ளது. (சக்தி ஏப்ரல் 1951. பக்கம் 47–80) மகா காவிஹோமரைத் தொடர்ந்து அதே இதழில் தொ.மு.சி. மொழிபெயர்த்த ஹோமரின் 'மந்திராலோசனை' கட்டுரை பக்கம் 81 முதல் 96 வரை வந்துள்ளது. இதோ அந்த முகப்புப் பககம் மட்டும்...

# மந்திராலோசனை

---

### ஹோமர்*

[முன்னுரை: ஒதூசியைப் பற்றி தெய்வ உலகத்தில் மந்திரா
ாசனை நடந்து முடிந்து விட்டது; அதீனித் தேவி தெலிமகஸிடம்
று வேடத்தில் வந்து ஆலோசனை கூறிச் செல்கிறாள். அதீனி
ன் போதனைப்படியே தெலிமகஸ் கிரேக்கர்களைச் சபை கூட்டி,
ர அரண்மனையைச் சுற்றி, தன் தாயின் காதலை நாடி, களியாட்
ஆடும் புல்லர் கூட்டத்தைப் போக்க வழி தேடுகிறான். அவனுக்
சபையிலுள்ளோருக்கும் வாக்குவாதங்கள் நடைபெறுகின்
ர. இந்தச் சம்பவத்தைத் தான் பின்வரும் பாடல்களில் நீங்கள்
ண்பீர்கள்.

.......

இந்தப் பகுதி ஹோமரது ஒதூசிய காவியத்தின் இரண்டா
ு சருக்கத்தின் ஆரம்பம். சபை கூடிக் கலையும் சம்பவத்தை
்படுத்தும் பகுதியை மட்டும் நூறு விருத்தங்களில் தமிழாக்கித்

*மொழி பெயர்த்தவர் : ரகுநாதன்

81

6

## கட்டபொம்மன் கதை

அந்த இதழில் பின் பக்க அட்டையில் வந்த விளம்பரம் இதோ

> அச்சாகிறது!
>
> **கட்டபொம்மன் கதை**
>
> பதிப்பாசிரியர்கள் :
>
> சிதம்பர ரகுநாதன் — கு. அழகிரிசாமி
>
> பாஞ்சாலங் குறிச்சி வீரன் வீரபாண்டியக் கட்டபொம்மனின் வீர சரித்திரத்தை நாடோடிப் பாடல்களில் கிராமத்து மக்கள் பாடி வந்தார்கள். அவை யாவும் இனிமை மிக்க பாடல்கள். அந்த நாடோடிக் காவியம் முழுவதும் அச்சாகிக் கொண்டிருக்கிறது. பல ஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்து, ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும் விளக்கங்களுடனும் முதன் முதலாக வெளியிடப்படுகிறது. இத்துடன் வீர பாண்டியக் கட்டபொம்மனின் உண்மை வரலாறும் இணைக்கப் பெற்றிருக்கிறது.
>
> பிரதிகள் வேண்டுவோர் முன்னதாகவே தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

ஆனால் அந்த நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை. பாஞ்சாலங்குறிச்சி (சுதந்திரப் போர் நூற்றாண்டுவிழா மலர் 1957), கட்டபொம்மு (சக்தி), கட்டபொம்மு நாடகம் என்ற மூன்று கட்டுரைகள் தொ.மு.சி. ரகுநாதனால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளது.

## பொன்னீலன்

மதிப்பிற்குரிய அண்ணன் சாகித்ய அகாதெமி விருது பெற்ற மூத்த எழுத்தாளர் பொன்னீலன், தொ.மு.சி. குறித்து நிறைய செய்திகளை நாட்டுக்கு வழங்கியிருக்கிறார். ரகுநாதன் வாழ்வும், பணியும் 2002, பக்கங்கள் 312; ரகுநாதன் இலக்கியத்தடம் 2003 பக்கங்கள், 265 எங்கள் ரகுநாதன் 2004 பக்கங்கள், 152 பக்கங்கள்; தொ.மு.சி. ரகுநாதன் 2013 பக்கங்கள் 168; ரகுநாதன் எழுதிய நூல்கள் 42, பதிப்பித்த நூல்கள் 2 என

பட்டியலிட்டுள்ளார்கள். அதில் ஒரு நூல் விடுபட்டுள்ளது. அடியேன் களஆய்வில் அகப்பட்ட அந்த நூல்....

## ஆணா, பெண்ணா?

ரகுநாதன் எழுதி, சக்தி காரியாலயம் ராயப்பேட்டை சென்னை 14 இல் இருந்து நவம்பர் 1950 இல் இரண்டரை ரூபாய் விலையில் 120 பக்கங்களில் வெளிவந்த நூல் ஆணா, பெண்ணா?



# ஆணா, பெண்ணா?

ரகுநாதன்

எழுதியது

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மக்கள் பேறு | 1 |
| 2. | சில அபிப்பிராயங்கள் | 6 |
| 3. | ஆண் பெண் உறுப்புக்கள் | 12 |
| 4. | சினை உற்பத்தி | 20 |
| 5. | கருத் தரிப்பது எப்படி ? | 26 |
| 6. | குரோமோசோம் | 33 |
| 7. | தவறான அபிப்பிராயங்கள் | 39 |
| 8. | 'இடம் வலம்' கொள்கை | 52 |
| 9. | டாஸனின் ஆராய்ச்சி | 56 |
| 10. | டாஸனின் ஆதாரங்கள் | 66 |
| 11. | எதில் தவறு ? | 76 |
| 12. | நடைமுறை சாத்தியமா ? | 80 |
| 13. | மேலும் சில விவரங்கள் | 89 |
| 14. | சில சிக்கல்கள் | 96 |
| 15. | கருத் தரிக்கும் காலம் | 107 |
| 16. | முடிவுரை | 114 |
| | பதப் பிரயோகப் பட்டியல் | 117 |
| | துணை நூற் பட்டியல் | 119 |


## மக்கள் பேறு

1

நண்பர் ஒருவர் வீட்டுக்குப் போயிருந்தேன். காதிலே லோலாக்கு, கழுத்திலே சங்கிலி, கைகளில் வளையல்கள், கால்களில் சதங்கைக் கொலுசு, இடையிலே ஒரு பாவாடை, மேலே கவுன், தலையிலே ரிப்பன், சின்னப் பூச்சரம்—இத்யாதி அலங்காரங்களுடன் ஒரு நாலு வயசுச் சிறுமி என் நண்பரை நோக்கி "அப்பா, அப்பா" என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடிவந்தாள்.

நான் திகைத்துப் போனேன். என் நண்பருக்கு மக்கள் செல்வத்தில் எந்தக் குறைவும் இல்லை. ஐந்து குழந்தைகள். என்றாலும், பஞ்ச பாண்டவர்களைப்போல் அத்தனையும் ஆண் குழந்தைகள். எனவேதான் அந்தத் திகைப்பு. அவரை அப்பா என்று அழைக்க அந்தச் சிறுமி யார்?....

"என்ன விழிக்கிறீர்கள்? இவள் என் பெண்தான் ஸார்!" என்றார் நண்பர்.

நான் கூர்ந்து கவனித்தேன். அந்தச் சிறுமி வேறு யாருமல்ல. நண்பரின் புத்திர சிகாமணிகளில் ஒருவன்தான் அப்படி 'அயன் ஸ்திரீ பார்ட்' வேஷம் போட்டிருந்தான்.

"இது என்னய்யா வேஷம் ?" என்று கேட்டேன்.

நண்பர் விளக்கினார் : "அதை ஏன் கேட்கிறீர்கள்? எங்களுக்கோ வருஷம் தவறாமல் குழந்தை பிறக்கிறதே



## முன்னுரை

நான் கதாசிரியன் ; வைத்தியன் அல்ல. எனினும் என் கதைகளில் நான் கையாளும் மனோதத்துவ விசாரத்தைப் புரிய வைப்பதற்காக, சரீர தத்துவ நூல்களையும் தெரிந்துகொள்ள முனைந்தேன். உடல் இல்லாமல் உள்ளம் இல்லை என நம்புபவன் நான். அதனால்தான் என் கதைகளில் பல சரீர தத்துவ சம்பந்தப் பட்டவையா யுள்ளன என்று சிலர் குறை கூறுகிறார்கள் ; சிலர் பாராட்டுகிறார்கள்.

அது வேறு விஷயம். எனக்கு இலக்கியத்தில் எத்தனை ஈடுபாடு உண்டோ, அத்தனை ஈடுபாடு சரீர தத்துவ நூல்களிலும் உண்டு. அந்த ஈடுபாட்டின் காரணமாக நான் எழுதிய முதல் நூல் தான் 'ஆணா பெண்ணா ?'

இந்நூல் உங்களுக்கு எவ்வளவு தூரம் பயனளிக்கிறது என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

சென்னை
நவம். '50

ரகுநாதன்

முதற் பதிப்பு : நவம்பர். 1950
உரிமை பதிவு செய்யப் பெற்றது

விலை ரூபாய் இரண்டரை
தபால் செலவு தனி

ரகுநாதன் எழுதிய
பிற நூல்கள்

முதல இரவு (நாவல்)
கன்னிகா ,,
புயல் ,,
ரகுநாதன் கதைகள் (அச்சில்)
நீயும் நானும் (கதைகள்)
இலக்கிய விமர்சனம்
தந்தையின் காதலி
(மொழிபெயர்ப்பு)

சென்னை ஸண்டே டைம்ஸ் பிரஸில் அச்சிடப்பெற்றது

**சக்தி 127**

**ஜீவப்பிரவாகம் முதலிய கதை, கட்டுரை, கவிதை** *பதிப்பாசிரியர் வை.கோவிந்தன் நூல் சக்திகாரியாலத்திலிருந்து ஜூன் 1950 இல் வெளிவந்தது. அதில் தொ.மு.சி. ரகுநாதன் ஐந்து கதைகள் பக்கம் 27 முதல் 30 வரை தந்துள்ளார். இதோ அந்தக் கதைகள்....*

## ஐந்து கதைகள்
## ரகுநாதன்

### 1

*கோர்ட் கூடியது.*

*முதலில் ஒரு பாங்கி மோசடி வழக்க. ஒரு பணக்காரன் லட்சக்கணக்கில் பணத்தைக் கையாடிவிட்டான். ஜாமீனில் விடப்பட்ட அவன் கோர்ட் வாசலில், ரோல்ஸ் ராய்ஸ் காரில் வந்திறங்கினான். வழக்கு நடந்தது; குற்றம் ருஜூவாயிற்று.*

*நீதிபதி குற்றவாளியின் குடும்ப அந்தஸ்து, வருஷ வருமானம் எல்லாம் விசாரித்தார். பிறகு "ஒரு வருஷம் சிறை, 'ஏ' வகுப்பு" எனத் தீர்ப்பளித்தார்.*

*அடுத்து ஒரு வழக்கு, ரிமாண்டிலிருந்த கைதி விலங்கோடு ஆஜர் படுத்தப்பட்டான். அவன் மீது திருட்டுக் குற்றம்.*

*"ஏன் திருடினாய்"?*

*"பிழைப்பில்லை. பசித்தது. திருடினேன்"*

*நீதிபதி அவனை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு தீர்ப்புச் சொன்னார்; "இரண்டு வருஷக் கடுங்காவல்; 'சி' வகுப்பு!"*

### 2

*ஊரில் அரிசி இல்லை!*

*மக்கள் பட்டினியால் வாடினர். ரேஷன் கடைகள் சாத்தப்பட்டன. ஏன் இந்தப் பஞ்சம்?....*

*ஊரில் அரிசி இருந்தது*

*கள்ள மார்க்கெட். ரூபாய்க்கு அரைப்படி; முக்கால் படி. இந்த அரிசி எது?...*

சென்ற வருஷம் மகசூல் குறையவில்லை; நல்ல மேனி என்றாலும் உழுதவன் வீட்டில் உணவில்லை; பண்ணையார் வீட்டில் மகளுக்கு நாலு நாள் கல்யாணம்.

ஏன்? எப்படி?....

அப்படியானால், அரிசி எங்கே? – இது வாடும் மக்களின் கேள்வி; பொது நலச் சங்கங்களின் கேள்வி. அரிசி இருக்கும் இடத்தை மக்கள் அறிந்து விட்டால்...?

பண்ணையார் பார்த்தார்; “தெய்வ குற்றம். மழையில்லை. வெள்ளாமை இல்லை. அம்மனுக்குப் படைப்பு போடவேண்டும்; கொடை நடத்தவேண்டும்” என்றார்.

கொடை நடந்தது; கொடும் பாவி கட்டி இழுத்தார்கள். இந்தப் பஞ்சத்திலும் வீட்டுக்கு உழக்கு அரிசியும், ஒரு பணமும் செலவு. “மாரியம்மா, கண்ணைத்திற” என்றார்கள்.

..............................................................................................................................................................................................................................................................................

பண்ணையாரையும் அரிசியையும் ஜனங்கள் மறந்து விட்டார்கள். ஊரில், கடவுள் உண்டா, இல்லையா என்ற வாக்குவாதம் பலப்பட்டது.

## 3

ரேஷன் கடை முன் க்யூ வரிசை.

புளுத்த அரிசியை வாங்கப் போராட்டம்; அதுவும் பற்றாக்குறை. மீதி நாள் பாடு அப்படி அப்படித்தான். கள்ள மார்க்கெட் இருக்கவே இருக்கிறது என்ற நம்பிக்கை.

ஒரு கூடைக்காரி வருகிறாள். கூடையில் அருமையான சீரகச்சம்பா அரிசி. விலை, பட்டணம் படி ரூபாய் நாலணா.

வெள்ளை மார்க்கெட்டில் கறுப்பு அரிசி.

கள்ள மார்க்கெட்டில் வெள்ளை அரிசி.

ஜனங்கள் கூடைக்காரியிடம் பேரம் பேசுகிறார்கள். ஒரு ரேஷன் இன்ஸ்பெக்டர் வருகிறார். கூடைக்காரியை ‘கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டார்.

"வா, ஆபீசுக்கு.. உனக்கு இந்த அரிசி ஏது?"

"சாமி, எனக்கு அரை கால் கிடைக்கதை, மண்ணடிச்சிப் புடாதே, வேணுமின்னா உனக்கும் அரைகா..."

"வா என்றால்?"

அவர் அவள் கையைப் பிடித்து இழுத்தார். "இவள் இப்படியெல்லாம் விற்கப் போய்த்தானே உங்களுக்கு நல்ல அரிசி கிடைக்கவில்லை!" என்று ஜனங்களைப் பார்த்துப் பேசினார் இன்ஸ்பெக்டர்.

கூட்டத்திலிருந்து ஒரு முரட்டுக் குரல் பேசிற்று;

"அட சரித்தான் போய்யா: இந்த அரிசி மட்டும் மரத்திலா காய்க்குது? இது எங்கேருந்து வருதுன்னு உன்னாலே கண்டு பிடிக்கத் திறனில்லே, அதைப் பிடுங்க மட்டும் வந்துட்டியே! நீயா எங்களுக்குப் படியளக்கிறே? இவதான் எங்க அன்னபூரணி! விடய்யா அவளை!"

கூட்டம் கூச்சலிடுகிறது. கூட்டத்தின் எதிர்ப்பைக் கண்டு இன்ஸ்பெக்டர் அவளை விட்டு விட்டு, தப்பித்துச் செல்கிறார்.

## 4

கல்யாணமான பெண்.

அவள் கணவன் இரண்டாம் தாரம் கொள்ளப் போவதாக அறிந்தாள். இருதாரம் கொள்வது தப்பு என்று கணவன் மீது கோர்ட்டில் வழக்குத் தொடுத்தாள்.

வழக்கு தள்ளுபடியாயிற்று. கணவன் மீது குற்றமும் இல்லை. ருஜூவும் இல்லை. இருதாரம் கொண்டால் ஒழிய, புருஷனை ஒன்றும செய்யமுடியாது என்றார்கள் கோர்ட்டார்.

கணவன் மறுதாரம் கல்யாணம் பண்ணிக் கொண்டான்.

இப்போது கோர்ட் அவன் மீது வழக்குத் தொடுத்தது. குற்றம் ருஜூவாயிற்று. கணவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. சிறைவாசம்; அபராதம்.

கணவன் அபராதத்தையும் கட்டி, சிறைக்குப்போனான். புது மனைவியும் முதல் மனைவியும் வெளியே இருந்தனர்.

## 5

*யுத்த காலம்; 1944 அல்லது 45.*

*மவுண்ட் ரோட் ரவுண்டாணா; எல்பின் ஸ்டன் கொட்டகைக்கு எதிரில், நடைமேடையில்....*

*நீக்ரோ சிப்பாய் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.*

*தசரா அல்லது முஹரம் பண்டிகை. கரிவேஷம் போட்டுக் கொண்டு, ஒருவன் தப்பட்டை மேள சகிதம் ஆடிப்பாடி வந்தான். நீக்ரோ சிப்பாயைக் கண்டான். அவன் எதிரே சென்று குதித்துக் குதித்து ஆடினான்.*

*நீக்ரோவனுக்கு கோபம் பொங்கிற்று; கரிவேஷக்காரனைக் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.*

*கலவரமாகி விட்டது.*

*நடை மேடையில் கன்னங்கறுத்த ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண் அமெரிக்க டாமியோடு கைகோர்த்து உலா சென்றாள். இருவரும் அந்தக் காட்சியைப் பார்த்தனர்.*

*அவள் தன் இரவல் நாயகனை ஏதோ அர்த்த புஷ்டியோடு பார்த்தாள்; புன்னகை புரிந்தாள்.*

### அலெக்சாந்தர் குப்ரின்

*இவர் ருஷ்ய எழுத்தாளர்; 1870ம் ஆண்டில் பிறந்தவர். இவருடைய முழுப் பெயர் அலெக்ஸாந்தர் ஐவானோவிச் குப்ரின் என்பதாகும். பெரும்பாலும் ருஷ்யாவின் ராணுவ வாழ்க்கையையும் சொந்த அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டே இவர் நாவல்களும், கதைகளும் எழுதியுள்ளார். இவர் எழுதிய* **யாமா** *என்னும் நாவலை "புதுமைப் பித்தன்" தமிழில் மொழி பெயர்த்து வைத்திருந்தார் என்று அறிகிறோம்.*

### ஜீவப்பிரவாகம்

*அலெக்ஸாந்தர் குப்ரினின் '***ஜீவப்பிரவாகம்***' கதையை தமிழில் மொழி பெயர்த்தவர் தொ.மு.சி. (சக்தி ஜூன் பக்கம் 31 – 69)*

### லூயிஜி பிரண்டல்லோ (1867 – 1936):

*இவர் இத்தாலிய எழுத்தாளர்; சிசிலித் தீவில் உள்ள கிர்கெண்ட்டி என்னும் நகரில் பிறந்தவர். ரோமாபுரியிலும்,*

போன் நகர சர்வகலா சாலையிலும் கல்வி பயின்று, ரோமாபுரியின் பெண்கள் கல்லூரி ஒன்றில் 24 வருஷ காலம் இத்தாலிய இலக்கியப் பேராசிரியராக இருந்தவர். முதலில் சிறுகதைகளும், நாவல்களும் எழுதத் தொடங்கி, பின்பு நாடகங்கள் எழுதலானார். உலகப் புகழ் பெற்ற நாடக ஆசிரியராகத் திகழ்ந்தார். 1932ல் இவருடைய நாடகம் ஒன்று ஆங்கில மொழியில் சினிமாப் படம் பிடிக்கப்பட்டுத் திரையிடப் பெற்றது. 1934–ல் நோபல் பரிசு பெற்றார். பெரும்பாலும் சிசிலித் தீவின் ஏழை மக்களையே கதா பாத்திரங்களாகக் கொண்டு, அபாரமான சித்தரிப்புடனும், சாதுரியமான நடையிலும் இவர் இலக்கிய சிருஷ்டிகள் செய்துள்ளார். இத்தாலிய இலக்கிய கர்த்தருள் தலைசிறந்த ஒருவர் என்று இவரைப் போற்றுகிறார்கள்.

இவர் எழுதிய ‘பெறாத பிள்ளை’ என்ற கதையை தமிழில் மொழி பெயர்த்தவர் தொ.மு.சி. (சக்தி 129, யாத்திரை கதை, கவிதை, நாடகம் பதிப்பாசிரியர் வை.கோவிந்தன், பக்கம் 5 – 44).

# பெறாத பிள்ளை

## லூயிஜி பிரண்டல்லோ*

* மொழி பெயர்ப்பு : தொ. மு. சி.

**காவியக்காதல்**

சக்தி காரியாலயம் பதிப்பாசிரியர் வை.கோவிந்தன் வெளியிட்ட **காவியக்காதல் கதை, கவிதை, கட்டுரை, நாடகம்,** நவம்பர் 1950 இல் வெளிவந்தது. இதில் பக்கம் 70 முதல் 96 வரை ரகுநாதனின் **பஞ்சப்பாட்டு** நாடகம் வந்துள்ளது. அத்தோடு காவியக்காதல் என்ற ரகுநாதனின் மொழி பெயர்ப்புக்கதையும் வெளியாகியுள்ளது. (பக்கம் 58– 69)


சி—131

காவியக் காதல்

கதை, கவிதை, கட்டுரை, நாடகம்

பதிப்பாசிரியர் :

வை. கோவிந்தன்

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை-14

**லூயி கௌப்பிரஸ் (1963 - 1923)**

இந்த டச்சு எழுத்தாளர் முழுப் பெயர் லூயி மாரீ ஆன் கௌப்பிரஸ் என்பதாகும். ஹாலந்தின் தலைமைப் பட்டணமாகிய ஹேக் நகரில் பிறந்தவர். இவருடைய மூதாதைகள் ஸ்காத்லாந்துக்காரர்கள். வாலிப காலத்தில் இவர் கிழக்கிந்தியத் தீவுகளில் வசித்து வந்தார். ஆரம்பத்தில்

இரண்டு கவித் தொகுதிகளை எழுதி வெளியிட்டார். அப்புறமே நாவல்களும் கதைகளும் எழுதத் தொடங்கினார். 1899ல் வெளிவந்த “எலைன் வீயரீ” என்ற இவருடைய முதல் நாவல் இவருக்கு இலக்கியப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது. டச்சு ஆசிரியர்களில் அதிக உலகப் பிரசித்தி பெற்றவர் இவரே. பத்திரிகை ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்” இவருடைய நூல்கள் மொத்தம் சுமார் ஐம்பதாகும். தமிழில் இவருடைய சிறுகதைகளில் சில வெளிவந்துள்ளன.

# காவியக் காதல்

**லூயி கௌப்பிரஸ்***

* மொழி பெயர்ப்பு : **தொ. மு. சி.**

### மாக்ஸிம் கார்க்கி

“மக்களைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு இலக்கியம் ஓர் அற்புத வழியாகும். அது மனிதனை அறிவதற்குரிய மூலமாகும்” என்பார் மாக்ஸிம் கார்க்கி.

### ப.ராமஸ்ஸாமி

இவரது தாய் நாவலை திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ப.ராமஸ்வாமி ‘**அன்னை**’ என்று மொழி பெயர்த்துள்ளார். **தாய்** என்று தொ.மு.சி. ரகுநாதன் **1975** இல் மொழி பெயர்த்தார். செப்டம்பர் 1950 இல் மாக்சிம் கார்க்கியின் **தந்தையின் காதலி** நாவலை 110 பக்கங்களில் தொ.மு.சி. ரகுநாதன் மொழி பெயர்த்து வெளியிட்டார். 1957 இல் மாக்சிம் கார்க்கியின் **மூன்று தலைமுறைகள்** நாவலை தொ.மு.சி. ரகுநாதன் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

1964 இல் **பிரம்மச்சாரியின் டைரி**’ முதற் புத்தகம் 536 பக்கங்கள், இரண்டாம் புத்தகம் 459 பக்கங்களில் மொழி பெயர்த்து 686 பக்கங்களில் தொ.மு.சி. ரகுநாதன் வெளியிட்டார். மதத்தைப் பற்றி கார்ல் மார்க்சும், பிரடெரிக் ஏங்கல்ஸூம் எழுதிய நூலை 1963இல் 521 பக்கங்களில் ரகுநாதன் தமிழில் மொழிபெயர்த்தார்.

## சந்திப்பு

*மாக்ஸிம் கார்க்கி சிறுகதைத் தொகுதியை 1951 இல்* **'சந்திப்பு'** *என்ற தலைப்பில் தொ.மு.சி.ரகுநாதன் வெளியிட்டார்.*

**'சந்திப்பு, 'தாலாட்டு', சிவப்பன், 'சங்கீதம்'** *ஆகிய கதைகள் 95 பக்கங்களில் வெளிவந்துள்ளது.*

## அந்தச் சிறுவன்

'அந்தச் சிறுவன்' என்னும் மாக்ஸிம் கார்க்கியின் கதையையும் தொமு.சி.ரகுநாதன் மொழி பெயர்த்துள்ளார். இது சக்தி இதழில் (மே 1948 பக்கம் 37 முதல் 40 வரை வந்துள்ளது. 'சந்திப்பு' தொகுதியில் வெளிவராத அந்தச் சிறுவன் கதையின் முகப்புப் பகுதி இதோ



# அந்தச் சிறுவன்

மாக்ஸிம் கார்க்கி

சின்னக் கதைதான். சொல்லுவதென்பது கஷ்டமான காரியம்; ஏனென்றால் அத்தனை சாதாரணமானது. எல்லா ஓய்வு நாட்களிலும்—கோடையாயினும், வசந்தமாயினும் — எங்கள் தெருப் பிள்ளைகளையெல்லாம் ஒன்று திரட்டி, வயல் வெளிகளுக்கும் காட்டுப் புறங்களுக்கும் விளையாட அழைத்துச் செல்வேன். அந்தப் பாலியத்தில், சிறுவரோடு சிறுவனாய் ஒன்றிப் பழகி, பறவையினம்போலக் களித்து விளையாடியது எனக்குப் பிடித்துப் போயிற்று.

தங்கள் தாய்மார்கள் கொடுத்த ரொட்டித் துண்டுகளை இடுக்கிக்கொண்டு நெருக்கமும் புழுதியும் நிறைந்த தெருக்களைவிட்டு விலகி விளையாட வருவதில் குழந்தைகளுக்கு ஒரே குஷி. நானும் கொஞ்சம் சர்க்கரை மிட்டாய் வாங்கிக் கொள்வேன்; மேலும் பாட்டில் நிறைய பீர் அடைத்துக் கொள்வேன். பின் கவலையற்ற ஆட்டு மந்தையைத் தொடர்ந்து செல்லும் இடையனைப் போல, ஊரைக் கடந்து, வயல்களைக் கடந்து, வசந்தத்தின் மரகதப் போர்வை போர்த்த அழகிய பச்சைப் பசுந்தழைக் காடு நோக்கிச் செல்லுவேன்.

வழக்கம்போல் அன்றும் காலையிலேயே புறப்பட்டுச் சென்ரேம்; செல்லும்போது தேவாலயத்தில் காலைஜெபத்து மணியோசை கேட்டது; மணியின் கலகலப்புக்கும், புழுதிப் படலத்துக்கும் இடையில், சிறுவர்களின் மெல்லிய காலடியோசைகளும் கேட்டன. மத்தியான வேளையில், வெயில் ஏறியபின், விளையாடிக் களைத்த நண்பர்களெல்லாம் காட்டுப் புறத்தின் கோடியில் கூடினார்கள்; உணவருந்தியபின் சின்னஞ் சிறுவர்கள் புல்லின் தரிசில் தூங்கப் போனார்கள்; வயது வந்த சிறுவர்கள் என்னைச் சுற்றி வளைத்துகொண்டு, கதை சொல்லச் சொல்லி அங்காந்திருந்தனர்; நானும் அவர்களுடைய கலகலப்பில் கலந்துகொண்டேன். வாலிபத்தின் அகந்தை நிறைந்த தன்னம்பிக்கையும், வாழ்க்கையைப் பற்றிய அரைகுறை ஞானத்தின் கெக்கலிப்பும் என்னுள் இருப்பினுங்கூட, அறிவாளிகளின் நடுவே அமர்ந்த இருபது வயதுக் குழந்தையைப் போலவே என்னைக் கருதினேன்.

எங்கள் தலைக்குமேல், திவ்யமான வான மண்டலம் நீண்டு கிடந்தது; முன்னால் ஆழ்ந்த அமைதியிலே புதைந்து கிடக்கும்

இந்த ருஷ்யக் கதையை ஸ்ரீ ரகுநாதன் மொழிபெயர்த்துத் தருகிறார். "இந்தக் கதை முழுவதுமே தெளிவற்றும் சர்வ சாதாரணமாகவும் இருக்கிறது அல்லவா? ஆனால்......"

## சாந்தி

ஆசிரியராக இருந்து தொ.மு.சி. ரகுநாதன் நடத்திய இதழ் சாந்தி; அதன் பிப்ரவரி *1955* இதழ் விலை *6* அணா. அதன் முகப்புப்படமும் சக்தி இதழின் *1948* மார்ச் இதழின் முகப்புப்படமும் ஒன்றாகவே உள்ளது. இதோ அந்தப் பக்கங்கள்.







ஆசிரியர்-ரகுநாதன்

## புதுமைப்பித்தன் கதைகள்

*சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் தனது வாழ்க்கை வரலாற்றை முதன் முதலாக 1951 இல் நூல் வடிவில் எழுதியவர் தொ.மு.சி.ரகுநாதன். அவர் 1990 இல் பதிப்பித்த காந்திமதி கலித்துறை அந்தாதி (60 பக்கங்கள்) தவிர்த்து தொ.மு.சி. பதிப்பித்த மற்றொரு நூல் புதுமைப்பித்தன் கதைகள். (ஆண்டு தெரியவில்லை) இளசை மணியன் 2009 இல்* **'புதுமைப்பித்தன் பற்றி ரகுநாதன்'** *என்ற நூலையும் வெளியிட்டுள்ளார்.*

## சிறுகதைப் போட்டி

*1955 பிப்ரவரி 'சாந்தி' இதழில் புதுமைப்பித்தன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியை நடத்திட அறிவிப்புச் செய்தவர்; அதன்படியே போட்டியை நடத்தியவர் தொ.மு.சி. ரகுநாதன் இதோ அந்த முகப்புப்பக்கம்.*

**"புதுமைப்பித்தன்"**

ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி

**1955**

★

**பரிசு ரூபாய் நூறு**

★

சிறந்த சிறுகதை எழுத்தாளரான அமரர் **'புதுமைப்பித்த'னின்** ஞாபகார்த்தமாக, திறமை வாய்ந்த இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு சாந்தி இந்தச் சிறுகதைப் போட்டியை நடத்தத் தீர்மானித்துள்ளது.

**நிபந்தனைகள்.**

1. ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளை அனுப்பலாம்.
2. கதையைத் தெளிவான கையெழுத்தில் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதியனுப்ப வேண்டும்; கதையுடன் கதாசிரியரின் முழுவிலாசமும் குறித்தனுப்ப …ண்டும்.
3. மொழிபெயர்ப்போ தழுவலோ கூடாது. இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளிவராத சுய சிருஷ்டியாக இருக்கவேண்டும்; அதற்கான ஒப்புதல் கடிதமும் அனுப்பவேண்டும்.
4. பரிசுத்தொகை ரூ. 100. ஒன்றுக்கு மேற்பட்ட கதைகள் பரிசுபெறத் …க்கதெனக் கருதப்பட்டால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.
5. பரிசுபெறும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கதைகளை முதன் முறையாகப் பிரசுரிக்கும் உரிமை மட்டும் சாந்திக்கு உரியது; பிற உரிமைகள் …னைத்தும் எழுதியவருக்கே.
6. எழுத்துப் பிரதிகள் திரும்ப அனுப்பப்படமாட்டாது. எனவே கதை …க்கு நகல் எடுத்துக்கொண்டு அனுப்புவது நலம்.
7. போட்டி சம்பந்தமாக எந்தவிதக் கடிதப்போக்குவரத்தும் கூடாது.
8. கதைகள் 1955 ஏப்ரல் மாதம் 10ம் தேதிக்குள் வந்துசேர வேண்டும்.
9. 1955 ஜூலை மாதம் நடைபெறும் புதுமைப்பித்தன் நினைவு விழாவை …டிப் பரிசுகள் வழங்கப்படும்.
10. …க்கு எழுத்தாளர்களைக்கொண்ட பரிசீலனைக் குழுவே கதைகளைப் …சீலனை செய்து முடிவுசெய்யும். (இவர்களின் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும்.)
11. சாந்தி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.
12. கதைகளை, 'பு. பி. சிறு கதைப் போட்டி-1955' என்று குறித்து ஆசிரியர், …தி'. 81. ஹைரோடு திருநெல்வேலி ஜங்ஷன் என்ற விலாசத்திற்கு அனுப்ப …ண்டும்.

3
Tomusi_Ctp.jobFORM 3

## 1999

வரலாற்றியல் பூர்வமான இலக்கிய ஆய்வு விமர்சனமாக *1999*இல் தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய நூல் **புதுமைப்பித்தன் கதைகள் சில விமர்சனங்களும், விஷமத்தனங்களும்** *530* பக்கங்களைக் கொண்ட அந்த நூலின் முகப்புப் பக்கமும் அதில் பக்கம் *285* இல் அடியேனது ஒரு நூலலைப் பற்றியும் எளியேன் பெயரையும் தொ.மு.சி. ரகுநாதன் குறிப்பிட்டது **எனக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்ததைப் போல எண்ணி மகிழ்ந்தேன்; மகிழ்கிறேன்; மகிழ்ந்து கொண்டே இருப்பேன்.**

அந்த நூலில் அடியேன் பெயர் வரும் இடம் இதோ

என்று எவ்வாறு கூறமுடியும்? அவ்வாறாயின், ஈ.வே.ரா.வை மட்டுமல்ல, திரு.வி.க.வையும், வருணாசிரமத்தையும் பிராமணியத்தையும் எதிர்த்து, 1927 இல் சேலத்தில் நடந்த சேலம் ஜில்லா மூன்றாவது அரசியல் மகாநாட்டில் வன்மையாகக் குரல் கொடுத்த (வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல், சேலம் மாநாட்டு உரை பதிப்பாசிரியர் செ.திவான்) செக்கிழுத்த செம்மலான தேசபக்தர் சிதம்பரம்பிள்ளையையும் வகுப்புவாதிகள் என்றுதான் கூற வேண்டும்.

## தொ.மு.சி. ரகுநாதன் இலக்கியத்தடம்

மதிப்பிற்குரிய பொன்னீலன் தொகுப்பாசிரியராக இருந்து 2003ல் 265 பக்கங்களில் வெளிவந்த நூல் தொ.மு.சி. ரகுநாதன் இலக்கியத்தடம் அதில் அடியேன் அப்போது எழுதிய கட்டுரை இதோ;

# நான் கண்ட தொ.மு.சி.

**- செ.திவான்**

அன்னைத் திருநாட்டின் விடுதலை வரலாற்றில், சரித்திரத்தை மாற்றிய சாகசச் செயலான மணியாச்சி ரயில் நிலையத்தில் நடைபெற்ற நெல்லை மாவட்ட ஆக்டிங் கலெக்டர் ராபர்ட் வில்லியம் டி எஸ்கார்டு ஆஷ் துரையை 17.6.1911 சனிக்கிழமையன்று வீரவாஞ்சி அய்யர் சுட்டுத்தள்ளியது குறித்து 'இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் தீவிரவாதம் – மணியாச்சி கொலை' எனும் அடியேனது எம்ஃபில் பட்டத்திற்கான ஆய்வேட்டைச் சமர்ப்பித்திட முனைந்த வேளை.

பெருமாள்புரத்தில் அப்போது வசித்து வந்த பொதுவுடமை இயக்கப் போராளி. தொ.மு.சி. அவர்களைச் சந்தித்து, சில ஐயங்களைக் கேட்டு வரச் சென்றேன்.

திண்ணையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அருகே புத்தகங்கள், கையில் சிகரெட்.

'ஐயா. வணக்கம் என்று சொல்லியவாறே வந்த நோக்கத்தினைச் சொன்னேன்' என்னை உற்றுப்பார்த்தார். தங்களின் பாரதி காலமும் கருத்தும் எனும் அற்புதமான நூலின் அரிய செய்திகள் பல அடியேனது ஆய்விற்குத் துணைபுரிகின்றன. அதில் சென்னை ஹைக்கோர்ட்டில் நடந்த ஆஷ் கொலை வழக்கின்போது அரசாங்கத் தரப்பில் எக்ஸிபிட் (தடையம்) ஆக சமர்ப்பிக்கப்பட்ட சில ஆவணங்களை வெளியிட்டுள்ளீர்கள். 'அதன் மூலப்பிரதிகள் உங்களிடம் இருந்தால் தாருங்கள்' படியெடுத்துக் கொள்கிறேன் என்று கேட்டேன்.

தருகிறேன் என்றும் சொல்லவில்லை. தரமாட்டேன் என்றும் சொல்லவில்லை. ரொம்ப இறுக்கமா இருக்காரே என்ற ஆதங்கத்தோடு வெளியே வந்தேன்.

## என்.ஜி.ஓ. காலனியில்

ஓரிரு ஆண்டுகள் கழித்து, என்.ஜி.ஓ. காலனியில் தொ.மு.சி. வசித்து வந்தார். அடியேனது நூல்கள், சிறு வெளியீடுகளை அவர்களது இல்லத்தில் சென்று கொடுப்பேன். சில சமயம் வாசலில் அவரது துணைவியார் வாங்கிக் கொள்வார்கள். சில சமயம் தொ.மு.சி. பார்த்துவிட்டால், உள்ளே வரச் சொல்லுவார். நூல்களைப் பணிவுடன் தருவேன். புரட்டுவார், போய் வாருங்கள் என்பார். இப்படி ஆண்டுகள் கழிந்தன.

## பாரதியும் காங்கிரசும்

'பாரதியும் காங்கிரசும்' எனும் நூல் எழுதி. அதனை அவர்களிடம் கொண்டு போய்க் கொடுத்தேன். அடுத்த சில நாட்களுக்குள் அடியேனுக்கு அவர்கள் அனுப்பி வைத்த அஞ் சல் அட்டையில்....

**தங்கள் பாரதியும் காங்கிரசும் என்ற பிரசுரம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. நன்றி, சிறிய கட்டுரையாயினும் சிறந்த கட்டுரை. பல தகவல்களையும் நன்கு தொகுத்துக் கூறியுள்ளீர்கள். தங்கள் எழுத்துப்பணி மேலும் வெற்றி காண என் வாழ்த்துக்கள் என்ற எழுத்துக்கள், ரகுநாதனின் கையெழுத்துடன்.**

கோடிப் பொன் கிடைத்ததைப் போன்ற மகிழ்ச்சி எனக்கு. இம்மடலைப் பொன்னெனப் போற்றிப் பாதுகாத்து வருகிறேன்.

## தெற்குக் கடைவீதியில்

பாளையங்கோட்டை தெற்குக் கடைவீதியில் சர்ச் அருகில் அதன்பின் தொ.மு.சி. வசித்து வந்தார்கள். அங்கேயும் முன்போல புத்தகங்களைக் கொண்டு கொடுப்பேன். வாசலில், வீட்டாரிடம். நேரில் அல்லது அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தால் அவர்களது அருகில். இப்படித் தொடர்ந்தது. 26.5.99 இல் அடியேனுக்கு தொ.மு.சி. எழுதிய மடலில் அன்பார்த்த நண்பர் அவர்களுக்கு. வணக்கம். தாங்கள் அன்புடன் கொடுத்துச் சென்ற வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் என்ற நூல் கிடைத்தது மிக்க

நன்றி. மகிழ்ச்சி. இப்போதைய காலச் சூழ்நிலையில் தங்கள் நூல் சில புதிய வெளிச்சங்களைப் புலப்படுத்தும் என்று எதிர்பார்க்கிறேன்.

முந்தைய மடல் அன்புடையீர் என்று துவங்கிற்று. இந்த மடல் அன்பார்ந்த நண்பர் என்று துவங்கியது கண்டு அக மகிழ்ந்தேன். முந்தைய மடலில் எனது நூலைப் பிரசுரம் என்றார்கள். இதனை 'நூல்' என்று ஏற்றுக் கொண்டார்கள். எனக்குள்ளே ஒரு பரிணாம வளர்ச்சி. எண்ணிப் பார்த்துக் கொண்டேன்.

'புதுமைப்பித்தன் கதைகள் சில விமர்சனங்களும், விஷமத்தனங்களும்' என்ற 530 பக்க நூலை தொ.மு.சி. ஆகஸ்ட் 99 இல் புதுமைப்பித்தனின் ஐம்பதாவது நினைவு ஆண்டு வெளியீடாக வெளியிட்டார். அந்த நூலில் 285வது பக்கத்தில், வ.சி.சி.யின் அரசியல் பெருஞ்சொல், சேலம் மாநாட்டுஉரை பதிப்பாசிரியர் செ.திவான் என்று அடியேனையும் குறிப்பிட்டதைக் கண்டு தொ.மு.சி.யின் பாராட்டும், போற்றும் உணர்வு குறித்துப் புரிந்து கொண்டேன்.

தொடர்ந்து அவ்வப்போது வெளியிடும் நூல்களைக் கொடுத்து வந்தேன். சிரிப்பார். பத்திரிகையில் பார்த்தேன் என்பார். பிறகு பிரிந்துவிடுவோம்.

## ஜனவரி 2001

'ஆரியப்பாதையில் பசுவதை' எனும் நூலினை வெளியிடத் தாங்கள் வாருங்கள் என்று அழைக்கச் சென்றேன் அப்போது கட்டபொம்மன் நகரில் வசித்து வந்தார்கள். தொ.மு.சி. 'என்னைத் தன்னோடு இருக்கச் செய்தார்கள். ஒரு மணி நேரம் பேசினார்கள். உடல் நலம் காரணமாக வர இயலாததைச் சொன்னார்கள்.

என்னை தன் எதிரே அமரச் சொன்னார்கள்.
காபியா? டீயா? என்றார்கள்.
எதுவானாலும் பரவாயில்லை என்றேன்.
தன் வீட்டாரை அழைத்தார்.
காபி கொண்டு வாருங்கள் என்றார்.
காபி வந்தது, குடித்தேன்

வாழ்க்கையில் அந்த ஒரு முறை மட்டும்தான் இது நடந்தது.

அதற்குப்பிறகு தொ.மு.சி.யோடு அமர்ந்து காப்பி குடிக்கப்போவதில்லை என்பது இறைவனைத்தவிர வேறு யார்தான் அறிந்திருக்க முடியும்.

21.4.2001

சாகித்தியஅக்காதெமி. பாளையங்கோட்டை சேவியர் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையத்தில் நடைபெற்ற எழுத்தாளர் சந்திப்பு நிகழ்ச்சியில் அவர்கள் ஆற்றிய உரை இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

'மனமே! நல்லனவும். தீயனவுமான சப்தங்கள் உன்னைத் தாக்கின காலத்தில் நீ நல்லனவாய்க் கொள்ளின் உனக்கு நன்மையையும், தீயனவாய்க் கொள்ளின் தீமையையும் பயப்பனவாயினவே' என்பர் தொ.மு.சி.யின் தந்தையார் பிரம்மமுத்தன் என்ற தொண்டைமான் முத்தையா (முப்பத்து மூன்று தியானச் சிந்தனைகள். நெல்லை. 1922. பக்.1)

20 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய இலக்கியச் சாதனையாளர்களின் ஒருவரான புதுமைப்பித்தன் சகாப்தத்தின் கடைசிச் சுடரான தொ.மு.சி.யுடன் பழகியவர்கள். அவரது தந்தையாரின் வார்த்தைகளை எண்ணிப் பார்த்தால் தொ.மு.சி.யின் உயர்ந்த உள்ளத்தைப் புரிந்து கொள்வார்கள். அண்மையில் அடியேனின் 50வது நூலான ஆலிப்புலவர் நூலினைக் கொடுத்திடும்மேதைகள் பட்டியலில், தொ.மு.சி. டிசம்பர் 31, 2001 மறைவு என்ற எனது குறிப்பெழுத்து.

*மகாகவி பாரதியின் புகழ்,*
*மாநிலத்திலிருக்கும் வரை*
*தொ.மு.சி.யின் நினைவு நிலைத்திருக்கும்.*
*புலி புதுமைப்பித்தனைப் போற்றும் வரையில், ரகுநாதனின்*
*புகழும் போற்றப்படும்.*

# தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய கடிதங்கள்

எளியேனுக்கு தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய கடிதங்கள் இதோ :



Phone: 574404
T.M.C. RAGUNATHAN
B 130. NGO A Colony
TIRUNELVELI-627 007

8.2.96.

அன்புடையீர்,

வணக்கம்.

தாங்கள் கொடுத்த 'திருக்குர்ஆன் – தமிழில் [illegible]
[illegible]' என்ற நூலையும், வ.உ.சி.யின்
[illegible] வெளியீட்டையும் [illegible] பார்த்தேன்.
[illegible]
[illegible] தமிழில் மட்டுமல்லாமல், பிற மொழிகளிலும்
வெளிவந்த நூல்கள் பற்றிய [illegible]
[illegible]

ஒரு தகவல் : திருக்குர்ஆனுக்கு 1956ல்
A new translation by N.J. Dawood
என்று [illegible] ஆங்கிலத்தில் புதிய
மொழிபெயர்ப்பு ஒன்று வெளிவந்துள்ளது.
மொழிபெயர்ப்பாளர் தமது மொழிபெயர்ப்பைப்
பற்றிக் குறிப்பிடும்போது,
Throughout this rendering, the
standard commentaries of
Al-Zamakhshari, Al-Beidawi
and Al-Jalalein have been
closely followed
என்று குறிப்பிட்டுள்ளார்.
[illegible]
[illegible]
[illegible]

வ.உ.சி.யின் [illegible]
[illegible]
வ.உ.சி.யின் [illegible]
[illegible]
[illegible]
[illegible]


अन्तर्देशीय पत्र कार्ड
INLAND LETTER CARD
திரு. கெ. திவான் அவர்கள்,
106-F5. திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை
पिन PIN 6 2 7 0 0 2




திருநெல்வேலி-7
25.12.97

அன்பார்ந்த திவான் அவர்களுக்கு,

[illegible]



திருநெல்வேலி
6.5.98

[illegible],

[illegible]

அன்புள்ள
ரகுநாதன்



திருநெல்வேலி-7
29. 6. 98

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் பாரதியும் காந்தியும் என்ற [illegible] கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி; நன்றி. இதிலுள்ள கட்டுரைகளையும் படித்து விட்டேன். பல புதிய செய்திகளையும் தேடி தொகுத்துக் கொடுத்துள்ளீர்கள். பாரதி எட்டயபுரம் ஜமீனில் [illegible] பணமுடிப்பு (பக். 8), [illegible] சொல்லாமல் சில [illegible] கடிதங்கள் (பக். 16) போன்ற பல செய்திகளை [illegible] தேடி [illegible]. தங்கள் தொடர்பணி மேலும் வெற்றி பெற என் வாழ்த்துக்கள்.

அன்புடன்
[illegible]


திருநெல்வேலி-2
26.5.99

அன்புமிக்க திரு ப. செயப்பிரகாசம்,

வணக்கம். தங்கள் கட்டுரைத் தொகுதியான 'வரலாற்றில் வெளிச்சம்' என்ற நூல் கிடைத்தது. மிக்க நன்றி; மகிழ்ச்சி. நீங்கள் போன்றவர்கள் [illegible] புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சும் என்று நம்புகிறேன். விரைவில் படித்துப் பார்ப்பேன்.

அன்புள்ள
ரகுநாதன்

# தொ.மு.சி. ரகுநாதன் கல்வி அறக்கட்டளை

தொ.மு.சி.ரகுநாதன் கல்வி அறக்கட்டளை சார்பில் எட்டயபுரத்திலிருந்து எளியேனுக்கு வந்த இரண்டு கடிதங்கள் இதோ :

## ரகுநாதன் கல்வி அறக்கட்டளை

(பதிவு எண் : 37 / 2000)

58, மேலரத வீதி, எட்டயபுரம் – 628 902

ரகுநாதன் நூலகம் பாரதி ஆய்வு மையம்

அறங்காவலர் குழு

பேரா. ஆ. சிவசுப்பிரமணியன்
தலைவர்

இளசை மணியன்
செயலாளர்

பெ. கணபதி சுப்பிரமணியன்
பொருளாளர்

உறுப்பினர்கள்
~~தொ.மு.சி. ரகுநாதன்~~ மறைவு
சோ. அழகர்சாமி
பொன்னீலன்
நா. இராமச்சந்திரன்
சு. சங்கரநாராயணன்
வெ. நடேசன்

5-05-05

அன்பார்ந்த நண்பரவர்களுக்கு,

வணக்கம். நலம். நலமறிய அவா. ரகுநாதன் தன் வாழ்நாளில் சேகரித்த நூல்களை வழங்கியதன் அடிப்படையில் ரகுநாதன் நூலகம், பாரதி ஆய்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்த சுமார் 10000 நூல்களை பொருள் வாரியாக, துறை வாரியாக ஒழுங்குபடுத்தியுள்ளேன். பாரதியார் நிலையத்தில் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு, கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பணியை செய்து வருகிறேன்.

தற்சமயம் கல்லூரி, பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் மற்றும் கிராம ஆய்வாளர்கள் நூலகத்திற்கு ஆய்வுப் பணிக்காக வந்து செல்கிறார்கள்.

இந்நிலையில், ரகுநாதன் படைப்புகள் சில நூலகத்தில் இல்லை. அவரின் நாடகங்கள் மருதுபாண்டியர், 'சிலை பேசிற்று' ஆகியவை இல்லை. திரு. ஹரிகிருஷ்ணனிடம் தொடர்பு கொண்ட போது, தங்களுக்கு கடிதம் எழுதச் சொன்னார். எனவே, மேற்கண்ட நாடகங்கள் தங்களிடம் இருப்பின், அவற்றிற்கு ஒளி அச்சுப்படி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அவருடைய '[illegible]' நாவலும் நூலகத்தில் இல்லை. அது தடைசெய்யப்பட்ட நூல். ஒரு பாரதி திரு. ரா.அ. பத்மநாபனிடம் இருப்பதாக ஹரிகிருஷ்ணன் கூறினார். எனக்கு அவர் அறிமுகம் கிடையாது. தங்களுக்கு அறிமுகமானவர் என கேள்விப்பட்டேன், அவரிடம் தாங்கள் தொடர்பு கொண்டு அதற்கு ஜெராக்ஸ் பிரதி எடுத்து அனுப்ப உதவுங்கள். ஒளி அச்சுப்படி எடுப்பதற்கு ஆகும் செலவை

நான் அனுப்பவைக்கிறேன்.

தங்களின் படைப்புகள் சிலவற்றை [illegible]க்கு அன்பளிப்பாக அளித்துள்ளீர்கள். அவற்றை நூலகத்தில் வைத்துள்ளேன். இனி தாங்கள் வெளியிடும் நூல்களில் ஒரு பிரதியை அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தொலைபேசி எண் 27/427 | 954632.

காலை 10 மணி வரையாகும் மதியம் 2 முதல் 4 வரையாகும் வீட்டில் இருப்பேன். அதுசமயம் பேசலாம்.

பரமன்

அன்புள்ள,


ரகுநாதன் [illegible] அறக்கட்டளை,
(பதி[illegible]000)
[illegible]
எட்டயபுரம் - 62[illegible]902.

எட்டயபுரம்
30-6-05

அன்பார்ந்த சகோதரருக்கு,

வணக்கம். ரகுநாதனின் [illegible] நாடகநூல் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. அறக்கட்டளை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருநெல்வேலி எம்.டி.டி.எச். கிளைக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். மேலாளர் இல்லை. மீண்டும் தொடர்பு கொண்டு நூல்களைப் பெற்றுக் கொள்கிறேன். முதலாவது நூல் பற்றி ரா.அ. நல்ல பெருமாளிடம் வாங்கியுள்ளீர்கள். தட்டச்சு [illegible] கேள்விப்பட்டேன். புதுமைப்பித்தன் நூற்றாண்டை ஒட்டி, 'புதுமைப்பித்தன் பற்றி' அவருடன் பல்வேறு சமயங்களில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடு

## முக்கூடற்பள்ளு

தொ.மு.சி. அவர்களைப் பார்க்க என் வாழ்நாளில் அவர் வாழ்ந்த நான்கு வீடுகளுக்குச் சென்றிருக்கிறேன். ஒருநாள் சொன்னார்கள். 'முக்கூடற் பள்ளு' இலக்கியத்தைப் பாடியவர் என்நயினாப் புலவர் இவர் முஸ்லிம் என்ற கருத்து உள்ளது. இதுகுறித்து நீங்கள் ஆய்வு செய்யலாம் என்று ஆலோசனை தந்தவர் தொ.மு.சி.

எளியேனின் வாழ்நாளில் மறந்திட இயலாத, மறக்க முடியா மறுக்க முடியாத இலக்கிய ஆளுமை தொ.மு.சி.

## தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறை

*21.4.2001* இல் பாளையங்கோட்டை தூய சவோரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் மற்றும் ஆய்வுநிலையம் சார்பில் சாகித்திய அகாதெமியும் இணைந்து நடத்திய ஆசிரியரைச் சந்திப்போம். (Meet the author) நிகழ்வில் தொ.மு.சி. ரகுநாதன் ஆற்றிய உரை மறந்திட இயலாது.

## 31.12.2001

*2001 ஆம் ஆண்டில் இறுதி நாள் தொ.மு.சி.யின் இறுதி நாளாயிற்று, பொதுவுடமை இயக்கப் போராளி கூர்மையான இலக்கிய விமர்சகர் கார்க்கியின் மொழி பெயர்ப்பாளர் கவிஞர், புதுமைப்பித்தனின் இளவல், சாகித்திய அகாதெமி விருதுபெற்றவர், சாந்தி முல்லை, சோவியத் நாடு இதழாசிரியர், சோவியத்நாடு நேரு விருது பெற்றவர் அவர் பெற்ற விருதுகளையும் பட்டங்களையும் சொல்லிக்கொண்டே சொல்லலாம்.*

## வழக்கறிஞர் ஹரீந்திரன்

*தொ.மு.சி.யின் மூத்த மகன் ஹரீந்திரன் வழக்கறிஞர். பழைய புத்தகக்கடையில் என்னோடு இணைந்து புத்தகங்கள் வாங்குபவர் சாகித்ய அகாதெமி துவக்க காலம் முதல் விருதுபெற்ற நூல்களை எல்லாம் வாங்கி வைத்திருந்தார் நல்ல இலக்கிய ஆர்வலர்.*

*தொ.மு.சி. மறைவிற்குச் சென்றதுபோல அவரது மறைவின்போதும் அவர் இல்லம் சென்று இறுதி மரியாதை செலுத்தி வந்தேன்.*

## டாக்டர் மாலதி ஹரீந்திரன்

*அவரது துணைவியார் டாக்டர் மாலதி ஹரீந்திரன் அவர்கள் '**தொ.மு.சி.யின் நாடகங்கள்**' என்றும் ஆய்வு நூலை 36 பக்கங்களில் தந்துள்ளார்.*

## சகோதரி ஆர்.மஞ்சுளா

*சகோதரிகள் நிர்மலா, சியாமளா, மஞ்சுளா என மூன்று மகள்கள் தொ.மு.சி.க்கு; அதில் சகோதரி ஆர்.மஞ்சுளா 'குந்தம்' எனும் கவிதை நூலை 96 பக்கங்களில் 2011 இல் வெளியிட்டார்.*

*தலைமுறை தலைமுறையாக தமிழ் இலக்கியத்திற்கு தலையாயப் பணியினைத் தொடர்ந்து செய்து வருகின்றது. தொ.மு.சி.யும் அவரது குடும்பமும், தொ.மு.சி.ரகுநாதனின் புகழை துளியளவேனும் இச்சிறுநூல் படிப்பவருக்கத் தந்தால் திவானுக்கு அதுபோதும்!*

ரெகான்
சுலைமான்
பதிப்பகம்